# இந்தியப் பெண்களின் உரிமைக் குரலான ‘திராவிட மாடல்!’

அண்ணா.. ஸ்டாலின் அண்ணா” என்று நெஞ்சம் கொஞ்சும் மழலைத் தமிழிலும், “அக்கா...கனிமொழி அக்கா” என்று இதயம் குளிரும் குழந்தைத் தமிழிலும் இந்திய அரசியலின் முன்னணி பெண் தலைவர்கள் ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக அழைத்த நிகழ்வு சென்னையை மட்டுமல்ல, இந்தியா முழுமையையும் கவனிக்கச் செய்திருக்கிறது.

தி.மு.க. மகளிரணியின் சார்பில் அக்டோபர் 14 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடத்தப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் சோனியா காந்தி அம்மையார் தொடங்கி அத்தனை பெண் தலைவர்களும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாட்டின் அளப்பரிய பங்களிப்பை எடுத்துரைத்தனர்.



**கோவி.லெனின்**
பத்திரிகையாளர்

ஜம்முகாஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி முதல் கேரளாவை சொந்த மாநிலமாகக் கொண்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா வரை, இந்தியாவின் வடக்கு எல்லை முதல் தெற்கு எல்லை வரையிலான பல மாநிலங்களைச் சேர்ந்த பெண் ஆளுமைகளும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வதை ஒவ்வொரு திட்டத்தின் வாயிலாகவும் எடுத்துக் காட்டினர்.

1989ஆம் ஆண்டிலேயே கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமபங்கு, வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30% இடஒதுக்கீடு, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் , கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம் எனப் பலவற்றையும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிஸ் எம்.பி. சுப்ரியா சுலே, சமாஜ்வாடி கட்சியின் டிம்பிள் யாதவ் எம்.பி, ஆம் ஆத்மி கட்சியின் ராக்கி பிட்லன், திரிணாமூல் காங்கிரசின் சுஷ்மிதா தேவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி எனப் பலரும் எடுத்துரைத்தனர்.

பெண்கள் நலன் காப்பதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னோடித் திட்டங்கள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் வெற்றிகரமாக செயல்பட்டதை கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் நினைவுகூர்ந்தது பெருமித நிகழ்வு. தலைவர் கலைஞரின் வழியில் திராவிட மாடல் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்கள் புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம் என வரிசையாகப் பல திட்டங்களை தந்து, இந்தியாவில் எந்த மாநிலமும் சாதிக்காத கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறை வேற்றியிருப்பதையும் பெருமை பொங்க எடுத்துரைத்தனர்.

திராவிட இயக்கத்தின் முன்னோடி அரசியல் இயக்கமான நீதிக் கட்சியின் ஆட்சியிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதையும் அதன் தொடர்ச்சியாக டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதையும்கூட எடுத்துரைத்தனர். கலைஞரின் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின்படி, குடும்பத் தலைவியின் பெயரில் வீட்டினைப் பதிவு செய்து கொடுத்து அவர்களை உரிமையாளராக்கியதையும் குறிப்பிட்டனர். அதே வழியில், கழகத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் பதிவு செய்யப்படுவதையும் குறிப்பிட்டு, இது தந்தை பெரியாரின் மண் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தனர்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை தேர்தல் ஆதாயம் கருதி நிறைவேற்றிய பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தையும் தோலுரித்தது மகளிர் உரிமை மாநாடு. ஜனநாயக விரோத பா.ஜ.க அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சிங்கங்களாக கர்ஜனை செய்வதையும், தங்களைப் போன்ற எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் துணை நிற்பதையும் உளப்பூர்வமாக எடுத்துரைத்தனர்.

பிரதமர் மோடி உள்பட பா.ஜ.க.வின் தலைவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு சென்றாலும் தி.மு.க. மீது வெறுப்பை விதைத்து வரும் நிலையில், இந்தியாவில் பாதுகாப்பு மிகுந்த, நல்லிணக்கம் கொண்ட, சமூக நீதிக் கோட்டையாக தி.மு.க. ஆளும் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை இந்தியாவின் பெண் அரசியல் தலைவர்கள் உரக்கச் சொல்லி, டெல்லி வரை கவனத்தை ஈர்த்துள்ளனர்.

மாநாட்டில் நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடலும் திராவிட இயக்கக் கொள்கையும் இந்தியா முழுமைக்கும் தேவைப்படுவதை வலியுறுத்தி, இதே ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெற்று பா.ஜ.க.வை வீழ்த்தும் என உறுதி தெரிவித்ததையும், வடமாநிலத் தொலைக்காட்சிகள் இந்தி உள்ளிட்ட மொழிகளில் சப்டைட்டிலுடன் வெளியிட்டன.

கும்மிடிப்பூண்டிக்கு அந்தப் பக்கம் தி.மு.க.வைத் தெரியுமா என்று கேட்ட கிணற்றுத் தவளைகளின் செவிட்டில் அடித்தாற்போல தி.மு.க.வும் அதன் திராவிட மாடல் ஆட்சிநெறியும் குமரி முதல் இமயம் வரை கொடிக் கட்டிப் பறப்பதை கவிஞர் கனிமொழி எம்.பி. அவர்கள் முன்னெடுத்த மகளிர் உரிமை மாநாடு மெய்ப்பித்துள்ளது. மாநாட்டில் கழகத் தலைவர் அவர்கள் சொன்னது போல, சென்னை சங்கமம் நிகழ்வை சிறப்பாக நடத்தி வரும் கவிஞர் இந்திய சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் உரிமைத் திட்டங்கள் வெறும் வாக்கு அரசியலுக்கானதல்ல, அவை பெண் விடுதலைக்கான சிறகுகள், ஆண்பெண் சமத்துவத்துன் அடையாளம். அதனால்தான் பல மாநிலங்களிலும் வந்திருந்தவர்கள், “ஸ்டாலின் அண்ணா.. கனிமொழி அக்கா” என நெஞ்சம் நிறைந்த சொற்களை வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள்.

இந்தியப் பெண்களின் உரிமைக் குரலாக ஒலிக்கிறது திராவிடக் கொள்கை. அதனை உறுதிப்பட நிறைவேற்றி வருகிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். அனைவருக்கும் அனைத்தும் என்கிற திராவிட மாடல் இனி இந்தியா கூட்டணியின் கொள்கை முழக்கமாகி, இந்தியாவை ஆளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றியவர்கள் உறுதி செய்துள்ளனர்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு- ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா வாழ்த்தரங்கம்!

### நடிகர் விஜயகுமார் - பர்வின் சுல்தான் - கவிதா பாரதி - அறந்தாங்கி நிஷா வாழ்த்துரை!

*சென்னை, அக். 17*

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு மாபெரும் வாழ்த்தரங்கம் நாளை (18.10.2023 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரத்தில் நடைபெறுகிறது.

சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், பி.உதய சங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், பி.சத்தீஸ், வ.நாமதேவன், ஆர்.ராஜராஜன், பி. இளஞ்செழியன், டி.ராஜி, இ . ஜே ா ஸ் வ ா , ஜெ.சத்தியமோகன், த.வெங்கடேசன், ஏ.ரவி, பி.ஜெகதீஸ், ஜெ.மகிழ ரசன், ஆர்.ஞானசேகரன், எம்.பிரபுநிவாஸ், பி. எஸ்.வள்ளல், டி.சரளா, ஆர். வசந்த், கே.பி.பிரபாகரன், எஸ். விஜயகுமார், எம். சியோன்ராஜ், ஆர்.விஷ்ணு, எம்.மோகன்ராஜ், கே.ஆர். சதிஷ், வி.மதிமாறன், டி.சென்பகவள்ளி, அ.மகேந்திரன், ஜி.எபிநேசர், பி.சேகர், ஏ. அருள், ஜி.சீனிவாசன், எல். போஸ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நடிகர் விஜயகுமார், முனைவர் பர்வின் சுல்தான், திரைப்பட இயக்குனர், நடிகர் கவிதா பாரதி, நடிகை அறந்தாங்கி நிஷா ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுகின்றனர். இந்நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிசந்திரன் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

74 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஜி.கிருஷ்ணகு மார் நன்றி கூறுகிறார்.

---

சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கான கட்டுமானப் பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

*சென்னை, அக்.17-*

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு56, பி.ஆர்.என். கார்டனில் ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் 720 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு55க்குட்பட்ட அப்பு தெருவில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் 223.28 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், வார்டு54க்குட்பட்ட பி.கே.கார்டன் பகுதியில் ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் 669.31 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் நடைபெற்று வரும் மீதமுள்ள பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த மையங்களில் ஆர்.என்.டி.சி.பி. அறை, மருந்தக அறை, இ.சி.ஜி./என்.சி.டி. அறை, அவசரக் கால அறை, பல் மருத்துவ அறை, ஆய்வக அறை, ஊடுகதிர் அறை, கலந்தாய்வுக் கூடம், பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை, வரவேற்பு அறை, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

மேலும், இங்கு பொது மருத்துவம், குடும்பநலம், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், டெங்கு காய்ச்சல், மலேரியா, காச நோய், கருப்பை வாய் புற்று நோய் ஆகியவற்றிற்கான மருத்துவ சேவைகளும், இரத்தத் தடவல், இ.சி.ஜி. மற்றும் ஸ்கேன் போன்ற பரிசோதனைகளும் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாநகர நல அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

---



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதட்டூர்பேட்டை பேரூராட்சி பகுதியில் பேருந்து நிலையத்தில் ரூபாய் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் மற்றும் பேருந்து நிலையம் மேல் தளம் அமைக்க கட்டுமான பணிகள் துவக்க விழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கட்டுமான பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் பேரூர் கழகச் செயலாளர் டி.ஆர்.கே.பாபு, ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திரா, என்.கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எம்.சுகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இ.கே.உதயசூரியன், உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---


நாள் : 17-10-2023 செவ்வாய்க்கிழமை
இடம் : SIRD வளாகம், மறைமலைநகர்

செங்கல்பட்டு மாவட்டத்தில்
அரசு திட்டங்களை ஆய்வு செய்ய வருகை தரும்

கழக தலைவர் மாண்புமிகு
தமிழ்நாடு முதல்வர்

அவர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்

மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்

திரு க.செல்வம் எம்.பி. காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்

SRL.இதயவர்மன் Ex.M.L.A.
திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்

ஜி.சி.அன்புச்செழியன்
தலைமை செயற்குழு உறுப்பினர்

எம்.சேகர்
திருப்போரூர் (தெ) ஒன்றிய செயலாளர்

வரவேற்று மகிழும் மு.தேவராஜ்
திருப்போரூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி மன்ற தலைவர்

பேரூர் கழக நிர்வாகிகள்
S.அஸ்கர் அலி வீ.சந்திரன் R.பரசுராமன் G.பலராமன்
S.ஏழுமலை G.வாணி மு.க.ரவி Y.மோகன் T.T.சேகர்
A.கமலகண்ணன் வீ.வீரபத்திரன் A.குமரன்



வரவேற்று மகிழும்

திருப்போரூர் பேரூர் கழகம்